## ஸ்ரீ கூரத்தாழ்வானின் ஆத்மகுணச்சிறப்பு

சோகத்தூர் ராமானுஜதாஸன், பெங்களூர்

श्रीवत्सचिह्नमिश्रेभ्यो नमउक्तिमधीमहे । यदुक्तयस्त्रयीकण्ठे यान्ति मङ्गळसूत्रताम् ॥

श्रीभाष्यकारशिष्याणां कूरेशानां महीयसाम् । संवत्सरसहस्रान्ते वैभवस्मरणं हितम् ॥

सतां प्रीत्यै तदीयात्मगुणगोचरलेखनम् । तन्यते वात्स्यवंश्येन रामानुजमनीषिणा ॥

எம்பெருமானாரின் ஶிஷ்யர்களில் முதல்வராக எண்ணப்படுபவரும், வடமொழி இலக்கணத்தில் நடமாடும் பதஞ்ஜலி என்று புகழப்படுபவரும், எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யம் எழுத ஒத்துழைத்த சிறந்த மேதாவியும், ஸ்வாமி தேஶிகன் மிகவும் உகந்து அடியொற்றிய ஸ்ரீபராஶரபட்டரின் திருத்தகப்பனாரும், அடைமொழி இன்றி ஆழ்வான் என்ற சொல்லால் குறிக்கப்படுபவரும், அதனாலேயே தெரியவரும் உயர்ந்த, பகவத், ஆசார்ய பக்தி நிரம்பியவரும், ஆளவந்தாரைப் போலே வேதாந்த ஶாஸ்த்ரார்த்தத்தை உயர்ந்த கவிவன்மையுடன் பஞ்சஸ்தவத்தில் வடித்துக் கொடுத்தவருமான ஸ்ரீகூரத்தாழ்வானின் 1000 திருநக்ஷத்ர பூர்த்தியை ஒட்டி வெளி வரும் கட்டுரைகளில் 'गङ्गासङ्गेन नैर्मल्यं रथ्याद्भिर्लभ्यते यदि । वाचो विशुद्धिसिद्ध्यर्थं सङ्गम्यन्ते गुरोर्गिरः ॥' என்னும்படி அடியேனுடைய வாக்கு ஶுத்தியை அடைவதற்காக ஸ்ரீஆழ்வானின் ஆத்மகுணச்சிறப்பைப் பற்றி சிறிது எழுத விழைகிறேன்.

ஆத்மகுணம் என்பது பொதுவாக வணக்கம், ஒழுக்கம், அடக்கம், இரக்கம், முதலிய நற்பண்புகளைக் குறிக்கும். தற்பெருமை, பொறாமை, வஞ்சகம், கேடு நினைத்தல்/விளைத்தல் முதலிய தீயபண்புகள் அற்றிருத்தலும் அதில் அடங்கும். अष्टावात्मगुणाः - दया सर्वभूतेषु, क्षान्तिः, अनसूया, शौचम्, अनायासः, मङ्गळम्, अकार्पण्यम्, अस्पृहा चेति । என்றபடி கருணை, பொறுமை, பொறாமையின்மை, பரிஶுத்தம், வருந்தாமை, நன்மையையே நினைத்தல், கோபமின்மை, ஆசையின்மை ஆகிய நற்குணங்களை உடையவர் ஆழ்வான். 'अष्टौ गुणाः पुरुषं दीपयन्ति प्रज्ञा च कौल्यं च दमः श्रुतं च । पराक्रमश्चाबहुभाषिता च दानं यथाशक्ति कृतज्ञता च ॥' உயர்ந்த அறிவு, நற்குடிப்பிறப்பு, புலனடக்கம், படிப்பு, பலமுடைமை, அதிகம் பேசாமை, தகுந்தவரை கொடை மற்றும் செய்ந்நன்றி ஆகியவையுமாம்.

येषां त्रीण्यपदानानि योनिर्विद्या च कर्म च । என்று போற்றத் தகுந்தபடி உயர்குலப்பிறப்பு, உயர்ந்த கல்வி, தொழிலால் (செல்வத்தால்) உயர்வு என மூவகைப்பட்ட சேராச் சேர்த்தி அமைந்திருந்தும் சற்றும் பெருமிதமற்றுத் திகழ்ந்தார் ஆழ்வான். முக்குறும்பறுத்தவர் என்றபடி.

தமது ஆசார்யரான எம்பெருமானாரை துதிக்கும் 'यो नित्यमच्युतपदाम्बुजयुग्मरुक्मव्यामोहतः तदितराणि तृणाय मेने । अस्मद्गुरोर्भगवतोऽस्य दयैकसिन्धोः रामानुजस्य चरणौ शरणं प्रपद्ये ॥', 'रामानुजाङ्घ्रिशरणोऽस्मि कुलप्रदीपस्त्वासीत् स यामुनमुनेः स च नाथवंश्यः । वंश्यः पराङ्कुशमुनेः स च सोऽपि देव्या दासस्तवेति वरदास्मि तवेक्षणीयः ॥' என்ற பாட்டுக்களில் ஆசார்யபக்திப்ரகர்ஷம் விளங்குகிறது. இராமானுசமுனி இன்னுரை சேர் சீரணி சிந்தையினோம் சிந்தியோமினித் தீவினையே என்றபடி ஸ்ரீபாஷ்யகாரரின் அருளுக்கு இலக்கானதால் தான் தன்னை ஒரு பொருளாகக் கருதுகிறார்.

இவரது வரலாற்றில் நிறைய நிகழ்ச்சிகள் இப்பண்புகளை நன்கு பறைசாற்றுமாறு அமைந்துள்ளன. அவற்றில் சிலவற்றை இங்கு தொகுக்கிறோம்.

1. தயை - எம்பெருமானாரின் திருவடிவாரத்திலே அந்தரங்க கைங்கர்யம் செய்து மொழியைக் கடக்கும் பெரும்புகழாளரான கூரத்தாழ்வான் நாலூரானுடைய உபத்ரவத்தால் ஸ்ரீபாஷ்யகாரரைக் காக்க கங்கைகொண்டசோழராஜனுடைய அரசவைக்கு எழுந்தருளி ஶிவாத் பரதரம் நாஸ்தி என்றதற்கு

ப்ரதியாக த்ரோணமஸ்தி தத: பரம் என்று பரிஹாஸமாக எழுதிக் கையெழுத்திட்ட பெரும் துணிவும், यदुक्तयः त्रयीकण्ठे यान्ति मङ्गळसूत्रताम् என்றபடி வேதேதிஹாஸபுராணாதிகளின் நூற்றுக்கணக்கான மேற்கோள்களால் ஸ்ரீமந்நாராணனுடைய பாரம்யத்தை நிலை நிறுத்த, அதனால் வெகுண்ட அரசன் நாலூரானை அவர் கண்களைப் பறிக்க ஏவ, உன்னைப் போன்ற பகவத் த்வேஷிகளைக் கண்ட கண்கள் எனக்கு வேண்டாமெனத் தாமே நம் தர்ஶனத்துக்காகத் தம் கண்களை இழந்தும், பேரருளாளனிடம் அடியேன் பெறும் இன்பம் நாலூரானுக்கும் கிடைக்க வேண்டும் என்று ப்ரார்த்தித்த பெருந்தகை இவர்.

2. க்ஷாந்தி - 'उपकारिषु यः साधुः साधुत्वे तस्य को गुणः? । अपकारिषु यः साधुः स साधुरभिधीयते ॥' உதவியவர்க்கு நல்லானாவதில் நல்லதனம் என்ன இருக்கிறது? தீங்கிழைத்தவர்க்கு நல்லது கோரினால் அது பாராட்டத்தக்கது என்பதற்கிணங்க பகவத்ஸங்கல்பத்தால் (தன்வினையை ஒட்டி) தான் ஒன்று ஒருவனுக்கு அநுகூலமோ, ப்ரதிகூலமோ ஆகிறது என்றறிந்து நடத்தல் பொறுமைக்குக் காரணம். இது கொண்டு தான் ஆழ்வான் நாலூரானையும் மன்னித்திட்டார் என்பது அவரது நடைமுறையில் க்ஷமையைக் காட்டுகிறது.

3. அநஸூயா - பொறாமையின்மை - ஸ்ரீபாஷ்யகாரரின் அளவற்ற க்ருபை மற்றும் அபிமானத்துக்கு பாத்ரராயும், பலவகையில் உயர்த்தியுடையவராயிருந்தும், பலபல ஸிம்ஹாஸனாதிபதிகள் தழைத்தோங்கக் காரணராய், தன்னை எவ்விடத்திலும் காணக்கொடாதவராய், உண்மையான நைச்யானுஸந்தானத்துடன் பாகவததாஸ்யரஸிகராய், 'नित्याभिवाञ्छितपरस्परनीचभावैः मद्दैवतैः परिजनैस्तव सङ्गसीय' என்று ஆஶாஸிப்பவராய் அநஸூயா குணத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார் ஆழ்வான்.

4. ஶௌசம் - பரிஶுத்தம் - 'क्षेत्रज्ञस्येश्वरज्ञानात् विशुद्धिः परमा मता' என்கிறபடியே பகவத்ஸ்வரூப ஜ்ஞானத்தாலும் மற்றும் தன்னுடைய ஶேஷத்வரூப ஸ்வரூபத்தை நன்கு அறிந்து அதற்குத் தக்க நடத்தை உள்ளவராதலாலும் மிகவும் உயர்ந்த தூய்மையை உடையவர் (ஶுசி) ஆகிறார் ஆழ்வான். 'अर्थे शुचिः स हि शुचिः न मृद्वारिशुचिः शुचिः' என்கிற படியே பணத்தில் ஆசையின்றி விரக்தியுடன் பெரும் தனவந்தராயிருந்தும் எல்லா ஐஶ்வர்யங்களையும் புறக்கணித்து எம்பெருமானாரை ஆஶ்ரயித்ததாலும் ஶுசி ஆகிறார். உயர்ந்த அனுஷ்டானஶீலராதலாலும் ஶௌசம் ஸித்திக்கிறது. 'महायज्ञैश्च यज्ञैश्च ब्राह्मीयं क्रियते तनुः', 'षट्कर्मनिरताः शुद्धाः' முதலிய ப்ரமாணங்களால் இது அறியலாகும்.

5. அநாயாஸம் - வருந்தாமை - தான் தன் புறக்கண்களை இழக்க நேர்ந்தபோதிலும் கலங்காது உட்கண்ணால் எம்பெருமானை எப்பொழுதும் கண்ட இவர் ஸம்ப்ரதாயத்துக்காக த்யாகம் செய்வதையே பெரிதாக மதித்ததால் இப்பண்பாளரானார். ஶ்ருதி 'पश्येम शरदः शतम्', 'भद्रं पश्येमाक्षभिर्यजत्राः', 'न सन्दृशे तिष्ठति रूपमस्य न चक्षुषा पश्यति कश्चनैनम् । हृदा मनीषा मनसाभिक्लृप्तो य एनं विदुरमृतास्ते भवन्ति' என்கிறபடி சொன்னதை 'नेत्रसात्कुरु करीश सदा मे' என்று வேண்டி, என் தக்க ஜ்ஞானக்கண்களாலே கண்டு தழுவுவனே என்ற ஆழ்வார் ஸ்ரீஸூக்தியை நினைவூட்டினார்.

6. மங்களம் - எல்லோருக்கும் எப்பொழுதும் நன்மையையே விரும்பும் இவர் 'यन्मङ्गळाय महते जगतामुशन्ति' என்று पञ्चस्तवी முதலியவைகளால் ஸ்ரீஆளவந்தாருக்குப் பிறகு நம் ஸித்தாந்தக் கருத்துக்களை ஸ்தோத்ரமாக அமைத்து நித்யானுஸந்தேயமாக்கிய பெருமைக்கு உரியவராகிறார். பின்புள்ளோரான ஸ்ரீபராஶரபட்டர், ஸ்வாமி தேஶிகன் முதலானோர் இவ்வழியைக் கையாண்டு ஶாஸ்த்ரீய ஸ்தோத்ர காவ்யங்களை இயற்றி நம்மை அனுக்ரஹித்துள்ளது இவரை முன்னோடியாகக் கொண்டேயாம்.

7. அகார்ப்பண்யம் - ஸுகம், துக்கம், நல்லது, கெட்டது இவற்றை ஸமமாக மதித்து பகவத் த்யானத்திலும், பகவத், பாகவத கைங்கர்யத்திலும் மட்டுமே நோக்காக இருந்ததால் ஆழ்வான்

இக்குணத்துக்கு உறைவிடம் ஆகிறார். தன் ஜ்ஞான, அனுஷ்டானங்களினால் மற்றவர்களுக்கு நல்ல எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார். ஸ்ரீ பெரிய நம்பிகளின் அபாரமான அனுக்ரஹத்துக்கு இலக்கானார். 'कूरेशस्य पवित्रकीर्तिवसतेः ....' इत्यादि.

8. அஸ்ப்ருஹா - பற்றின்மை - இவ்வுலகத்திய பொருள்களான வீடு, வாசல், சொத்து, சுதந்திரம் முதலியவற்றில் சற்றும் பற்றற்று, தோட்டம் இல்லவள் ஆத் தொழு ஓடை துடவையும் கிணறும் இவையெல்லாம் வாட்டமின்றி உன் பொன்னடிக்கீழே வளைப்பகம் வகுத்துக் கொண்டிருந்தேன் நாட்டு மானிடத்தோடு எனக்கரிது என்று பெரியாழ்வார் கூறிய கணக்கிலே பரம விரக்தியுடன் ஆசார்ய கைங்கர்யத்திலும் பகவச்சிந்தனையிலும் ஈடுபட்டவராதலால் நிஸ்ஸ்ப்ருஹராகிறார்.

இவ்வாறு எட்டு ஆத்மகுணங்களும் பரிமளிக்கும்படி உயர்ந்த ஆசார்யராகிறார் திரு கூரத்தாழ்வான்.

இனி மற்றுள்ள குணங்களில் ப்ரஜ்ஞையாவது - உயர்ந்த அறிவாற்றல். இது ஸ்ரீபாஷ்யகாரருக்கு நிகரான புத்திக்கூர்மை, காஷ்மீரத்தில் மிகப் பெரியதான போதாயன வ்ருத்தியை ஓரிரவிலே பார்த்தவுடன் மனதில் நன்கு தேக்கி வைத்துக் கொண்டதால் வெளியாகிறது. ஹாரீத கோத்ரத்தில் உயர்ந்த குலத்தில் பிறப்பினால் ஸத்குலப்ரஸூதத்வம் (கௌல்யம் = ஆபிஜாத்யம்) ஏற்படுகிறது. 'अभिजनविद्यासमुदेतं समाहितं संस्कर्तारमीप्सेत्' என்று ஆபஸ்தம்பர் முதலானோர் குறிப்பிட்ட பெருமை இதுவே.

புலனடக்கம் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. படிப்பு - நடமாடும் பதஞ்ஜலி என கூறப்பட்டு எல்லா கலைகளிலும், துறைகளிலும் ஏற்றத்தால் (ஸகலஶாஸ்த்ரபாரங்கதராதலால்) இவரிடம் குடிகொண்டுள்ளதால் அறியலாம். துணிவு மற்றும் அஞ்சா நெஞ்சம் சோழஸபையிலும், பலவிதமாக ஸம்ப்ரதாயத்தைக் காக்க சீர்திருத்தங்கள் செய்ததாலும் அறியலாம். ஸ்ரீரங்கம் பெரிய கோயிலில் வைதிகமுறையில் ஸ்ரீபாஷ்யகாரர் திருவுள்ளப்படி உத்ஸவாதிகளை நடைபெறச் செய்ததால் தெளிவாகும். அதிகம் பேசாமைக்கு எடுத்துக்காட்டு திறமையிருந்தும் அடக்கத்தால் பேசாமை, எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யத்தை பட்டோலைப் படுத்தும்போது தான் கூட இருந்து போதாயனவ்ருத்தியில் படித்ததைச் சொல்வதன் மூலமும், அதைக் காட்டிலும் ஸ்ரீ பாஷ்யகாரர் ஸாதிக்கத் தான் எழுதத் தொடங்கின போது ஆசார்யர் கூறியதில் சற்று மாறுபாடு இருந்தால் எழுதுவதை நிறுத்துவதன் மூலம் குறிப்பால் உணர்த்துவதாலும் விளங்கும். கொடையில் கூரத்தாழ்வானுக்கு நிகர் எவருமிலர். கூரம் என்னும் ஊருக்கே அரசராயிருந்தும் தன் எல்லா உடைமையையும் தக்கவர்களுக்கு ஈந்து தான் ஸம்ப்ரதாயப் பணியில் முழுமையாக ஈடுபட்டதால் அறியலாம். செய்ந்நன்றி அவருடைய க்ரந்தங்களினின்று நன்கு வெளிப்படுகிறது. 'श्रीमन्तौ हरिचरणौ समाश्रितोऽहं श्रीरामावरजमुनीन्द्रलब्धबोधः' முதலியன குறிப்பிடத்தக்கவை.

இவ்வாறு எல்லாவிதத்திலும் இணையற்ற ஆசார்யராகவும், உயர்ந்த ஶிஷ்யராகவும் திகழும் ஸ்ரீகூரத்தாழ்வானின் திருவடித்தாமரைகளில் அனந்த ப்ரணாமங்களைச் செய்து அன்னாருடைய திருவருளால் அல்லாவழியைக் கடத்தல் எமக்கினி யாதும் வருத்தமன்றே எனப் பூரிப்படைவோம்.

नमः श्रीवत्सचिह्नेभ्यः कूरेशेभ्यस्त्वधीमहे । यतिराजप्रियार्येभ्यो यत्र भान्त्यात्मसद्गुणाः ॥